DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 127/2023

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நந்தினி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சந்தானபாரதி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 10/01/2024

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் .)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் மூலச்சத்திரத்தில்குடியிருந்து வருகிறேன். 24.04.2019 ம் தேதி எனது வளைகாப்பிற்காக பேச வந்த எனது அம்மா சரஸ்வதி, தாய் மாமா பாலசுப்பிரமணி இருவரும் எனது வீட்டிற்கு எனதுமாமனார் செல்வராஜிடம் எனது மாமியாரும்இந்திராணியிடமும்,மற்றும் எனது கணவர் சந்தானபாரதியிடமும் பேசுவதற்காக வந்தனர். எனது அம்மா மாற்றும் மாமாவிடம் எனது வீட்டில் இருந்த மாமனார், மாமியார், கணவர் யாரும் பேசாததால் அவர்கள் திரும்பி சென்றுவிட்டார்கள். அன்று இரவு எனது மாமா எனது அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று என்னை கூப்பிடவந்ததற்கு எனது மாமனார், மாமியார், கணவர் யாரும் என்னை செல்ல அனுமதிக்கவில்லை. சொந்த பந்தம் அனைவரும் எனது வீட்டிற்கு வந்தார்கள். நான் கர்ப்பினி என்றும் பார்க்காமல் எனது கணவரின் அத்தையான அமுதவள்ளி என்னை கீழே தள்ளிவிட்டார். நான் பார்த்து வாழ சொன்னால் தான் அவன் வாழ்வான் என்றும், இல்லையென்றால் உன்னுடன் வாழமாட்டேன் என்றும், அவர் சொன்னார். நீதான் எல்லா பிரச்சனைக்கும் காரணம் என்றும், 25 லட்சம் பணம் கொடுத்தால்தான் எனது கணவருடன் சேர்ந்து வாழ விடுவேன் என்றும் சொன்னார். எனது மாமியார், மாமனார் அனைவரும் சேர்ந்து எனது தாய்மாமாவை அடித்து வெளியே தள்ளினார்கள். பின்பு நான் எனது அப்பாவின் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதிலிருந்து இன்று வரை நான் அப்பாவின் வீட்டில் தான் இருந்து வருகிறேன். 25.03.2022 ம் தேதி அன்று சம்பவம் தொடர்பாக ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் பின்பு நீதிமன்றத்தில் புகார் மனு

அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையதுதான். **புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு 25.03.2022ம் தேதி எனது புகார்மனுவிற்காக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். போலீசார் என்னைவிசாரணை செய்தார்கள்.ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் தான் எனது கணவர் சந்தானபாரதி, எனது மாமியார் இந்திராணி, எனது மாமனார் செல்வராஜ், எனது கணவரின் அத்தை அமுதவள்ளி ஆகியோர்கள் ஆவார்கள்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1) நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் புகாராக எழுதி காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் ஆமாம். புகார் மனு அ.சா.ஆ.1 ல் 24.04.2019ம் தேதி வளைகாப்பு ஏற்பாடுகள் செய்ய வந்தார்கள் எங்கள் மாமாவை எதிரிகள் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் இந்த புகார் சொல்லவில்லை. 12.10.2020ம் தேதி கொடுத்த புகாரில் கூறியுள்ளேன். புகார் மனுவில் குறிப்பாக எந்த வகையாக கொடுமை செய்தார்கள் கூடுதலாக எவ்வளவு வரதட்சனை கேட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 4ம் எதிரி அமுதவள்ளி 25லட்சம் பணம் கேட்டார் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2) நான் கொடுத்த புகாரில் யார் யார் என்ன கொடுமைகள் செய்தார்கள் என்றும் யார் மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுத்த பிறகு முதல்தகவல்அறிக்கையை வாங்கி படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். புகாரிலும், போலீசார் விசாரணையிலும் எந்த தேதியிலிருந்து எதிரிகள் என்னை கொடுமை செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் 12.09.2018 ம்தேதி முதல் என குற்ற நிகழ்வு நாள் என குறிப்பிடபட்டுள்ள நிலையில் திருமணம் முடிந்த நாளிலிருந்து எதிரிகள் என்னை கொடுமைப்படுத்துவதாக நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே 01.02.2021ம் தேதியில் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் அவரவர் பொருட்களை பெற்றுக்கொண்டு அதற்கு ஆவணங்கள் தயார் செய்து கொண்டோம் என்றால் சரிதான். 25.03.2022ம்தேதியில் புகார் கொடுத்த அன்றே போலீசார் விசாரணையில் எதிரிகள் எனது நகைகளை பிடுங்கிக்கொண்டு விட்டார்கள் என்று உண்மையை மறைத்து நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) திருமணத்தின் போது எனது பெற்றோர்கள் 47 பவுன் தங்க நகையும் 2லட்சம் மதிப்புள்ள பண்டபாத்திரமும் வரதட்சனையாக கொடுத்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வரதட்சனை கொடுப்பது குற்றம் என்று தெரிந்தும் வரதட்சனை கொடுத்ததாக கூறியிருக்கிறேன் என்றாலும் எதிரிகள் வரதட்சனை கேட்டதாக எதிலும் குறிப்பிடவில்லைஎன்றால் சரியல்ல. அவர்கள் கேட்டதால்தான் கொடுத்தோம். எதிரிகளோ, அவர்களது குடும்பத்தாரோ வரதட்சனை எங்களிடம் கேட்கவில்லை என்றாலும் அவ்வாறு கேட்டு இருந்தால் நான் புகாரிலும்

போலீசார் விசாரணையிலும் இதை பற்றி கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. சந்தான பாரதி புருணே நாட்டில் வேலை செய்தாரா என்றால் ஆமாம். புருனை நாட்டில் சந்தான பாரதி வேலை செய்வதாக கூறி திருமணம் செய்து கொண்டார் என்று உண்மைக்கு புறம்பாக என்னை ஏமாற்றினார் என்று கருத வேண்டும என்பதற்காக நான் பொய்யாக விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) போலீசார் விசாரணையில் நான்கு மாதத்தில் புருணை நாட்டிற்கு சென்றவர் திரும்பிவிட்டார் என்று சொல்லிவிட்டு எனது வழக்கறிஞர் பதில் அறிவிப்பில்மூன்று மாதம் என்றும், குடும்ப நல நீதிமன்றம் மனு எண் 208/2020 ல் இரண்டு மாதம் என்றும், DVOP 4/2021 ல் இந்த வழக்கில் முதல்தகவல் அறிக்கையிலும் நான்கு மாதம் என்றும் நான் முரண்பட்டு கூறியிருக்கிறேன் என்றால் நான்கு மாதம் என்று போலீசார் எழுதியது எனக்கு தெரியாது. நான் நகைகளை திரும்ப பெற்றுக்கொள்வதற்கு முன்பு கே.வி.பி.வங்கியில் நானும் சந்தானபாரதியும் இணைந்து கையாளும் விதமாக வங்கியில் வைத்து இருந்தோம் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் என்னை எனது கணவர் அவரது பெற்றோர்கள் பேச்சை கேட்டுக்கொண்டு தினமும் பணம்கேட்டு என்னை அடித்து துன்புறுத்தி வந்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5) எனது கணவரின் அத்தை மகளை திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எனது கணவரிடமிருந்து என்னை பிரித்து பிரச்சனை செய்தார்கள் என்று எத்தனை மகள்கள் எந்த பெண்ணை திருமண செய்ய ஏற்பாடு செய்தார்கள் என்பதை பொறுத்து நான் குறிப்பிடாமல் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் உண்மையாக இருந்து இருந்தால் நான் பெண்ணின் பெயர் குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றாலும் அவ்வாறு சம்பவம் நடைபெறாதால்தான் நான் பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. 25 லட்சம் கேட்டு எதிரிகள் என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்று சொல்வது பொய் என்றாலும் 1ம் எதிரியின் விருப்பத்தின் படியே அவர் அவரது முயற்சியில் வேலை பார்த்தார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நான் 1ம் எதிரி மீது HMOP எதிரிகள் மீது DVOP ஆகியவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் விவரக்ஙளை இந்த வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) அந்த வழக்கில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் முரண்பட்ட சங்கதிகளுடன் இந்த வழக்கின் புகார்மனுவை நான் அளித்ததால் தான் மேற்படி வழக்குகளின் விவரங்களை யும் ஆவணங்களையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது நகைகளை கொடுங்கள் எனது அப்பா வீட்டிற்கு போய்விடுகிறேன் என்று சொன்னதற்கு என்னை எதிரிகள் அடித்து உதைத்து வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள் என்று சங்கதிகள் உண்மையாக இருந்து இருந்தால் இதற்கு முன்பு கொடுத்த புகாரில் இந்த விசயத்தை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எனது கணவர், அப்பா, அம்மா, அத்தை யாரும் குழந்தையை பார்க்க வரவில்லை என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ள நான் எனது கணவரும்அவரது அத்தையின் கணவர் வீராச்சாமியும் குழந்தை வந்து பார்த்ததாக மற்ற வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

7) எனது கணவரும் கணவர் குடும்பத்தாரும் என்னையும் என் குழந்தையையும் நல்லமுறையில் கவனித்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் உண்மையை மறைத்து எதிரிகள் மீது குற்றம் சுமத்தி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவரோ, மற்ற எதிரிகளோ என்னை வரதட்சனை கேட்டு எந்தவிதத்திலும் துன்புறுத்தவில்லை என்றாலும் எந்தவிதத்திலும் நம்பிக்கை மோசடி செய்யவில்லை என்றால் சரியலல. நான் புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறும், போலீசார் விசாரணையில் கூறியுள்ளவாறும் , முதல்விசாரணையில் கூறியுள்ளவாறும் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2024.01.10 17:33:16 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 10/01/2024